IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO: 1/2018

**<u>DEP OF WITNESS:</u> <u>PW2</u>**

NAME: Boobalan RELIGION:Hindu

FATHER NAME: Ananda CASTE: Vanniyar

VILLAGE: V.Mottur OCCUPATION: Salesman

TALUK:Gudiyattam AGE:43

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 30-01-2019

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் வி.மோட்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீரசெட்டிபள்ளி கூட்டுறவு வங்கியில் வி.மோட்டூர் ரேஷன் கடையில் சேல்ஸ் மேனாக பணிபுரிகிறேன். வாதி, பிரதிவாதிகளை தெரியும். பிரதிவாதி லட்சுமணனும் சாமிரெட்டிபள்ளி ரேஷன் கடையில் சேல்ஸ் மேனாக பணிபுரிந்து வருகிறார். பிரதிவாதி வாதியிடம் கடன் வாங்கிய விவரம் எனக்கு நேரடையாக தெரியும். பிரதிவாதி ரூ.50,000/-ஐ கடனாக வாதியிடம் வாங்கினார். வாதியின் வீட்டில் வைத்து கடன் வாங்கினார். வாதி பிரதிவாதிக்கு ரூ.50,000/-ஐ கடனாக கொடுத்த போது நான் உடன் இருந்தேன். அதற்கு பிரதிவாதி ஒரு பாண்டை வாதிக்கு எழுதிக்கொடுத்தார். அந்த பாண்டில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தாவா புரோநோட்டில் 2-வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னோடு சேர்ந்து எங்கள் ஊரை சேர்ந்த வடிவேலு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையது தான் அந்த கையொப்பத்தை எனது முன்னிலையில் தான் போட்டார் அவர் கையெழுத்துக்கு கீழே தேதியையும் குறிப்பிட்டுள்ளார். அந்த கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2/- வட்டி என்று பேசப்பட்டது. அதை ஒப்புக்கொண்டு தான் பிரதிவாதி பாண்டை எழுதிக்கொடுத்தார்.

Sd/ Boobalan (PW2)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 30.01.2019.
District. Munsif.